# நப்பைஞ்ஞீலிக்கோயில் அர[illegible]

திருச்சி பிஷபஹீபா ஹைஸ்கூல் தமிழ் ஆசிரியா

திரு. R பஞ்சநதம் பிள்ளை அவர்களால்

எழுதப்பெறறு

திருப்பைஞ்ஞீலி தேவஸ்தானம் நிர்வாகத் தலைவா

திரு. P. சுப்பையா பிள்ளை, B. A.,

கௌரவ தர்மகர்த்தாகள

திரு நா. அரங்கசாமி செட்டியார்

திரு தா. செவந்திலிங்கம் பிள்ளை

ஆகியவர்களால வெளியிடப் பெற்றது.

இரண்டாம் பதிப்பு

சாது அச்சுக்கூடம்,

இராயபேட்டை, சென்னை.

1942

செயயப்பட்டது]

# முகவுரை

மனிதனை விலங்கு நெறியினின்று விலக்கித் தன்னையும், தன்னைச் சூழ்ந்துள்ள பந்த பாசங்களையும், தலைவனையும் உள்ளவாறு அறிவித்துத் தெய்வ நெறியில் செலுத்துவது சமய வாழ்க்கையாம். பசுவின் உடல் முழுதும் பால் மறைந்திருந்த போதிலும் மடியின் மூலமாகவே பால் தோன்றுவது போல, எல்லாப் பொருள்களிடத்திலும் இறைவன் கலந்திருந்த போதிலும் ஆன்றோர்கள் அருள்பெற்ற ஆலயங்களில் உள்ள மூர்த்திகளின் மூலமாகவே இறைவன் அருள்புரிவான் எனப் பெரியோர் கூறுவர். தமிழ்நாட்டில் உள்ள ஆலயங்கள் தமிழ் அரசர்கள் காலத்தில் மிகவும் பெருமையுற்றிருந்து பிற்காலத்தில் அவற்றின் பெருமைகள் குறையலாயின. கோயிற் பூஜைகள் சரிவர நிகழாதாயின் நாட்டின் நலம் குன்றுமென நூல்கள் கூறும்.

சென்னை இந்துமத அறநிலையப் பாதுகாப்புக் கழகம் (Hindu Religious Endowments Board) ஏற்பட்டுத் தற்கால நிர்வாகத்தில் ஆலயங்கள் யாவும் புத்துயிர் பெற்று வருகின்றன. செந்தமிழ்ப் பற்றுடையவரும், சைவ அன்பரும், கல்வெட்டு ஆராய்ச்சியாளரும், போர்டின் கமிஷனருமாகிய திருவாளர் - ராவ்பகதூர் - C. M. இராமச்சந்திரஞ் செட்டியார், B. A., B. L., அவர்கள் தேவஸ்தானங்களுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கைக்கு இணங்க, இச்சிறு நூல் திருப்பைஞ்ஞீலி புராணத்தைத் தழுவி யாவரும் எளிதில் அறிந்து கொள்ளும் வண்ணம் எளிய நடையில் எழுதப் பெற்றுள்ளது. இத்தலத்தைப்பற்றிய சில துதிப் பாடல்களும் பின்னே சேர்க்கப்பட்டுள்ளன. திருச்சி தமிழ் ஆசிரியர் திரு. R. பஞ்சநதம் பிள்ளை அவர்கள் இந்நூலை அன்புடன் எழுதி உதவினார்கள். இரண்டாம் பதிப்பு புதிய திருத்தங்களுடன் வெளியிடப் பட்டுள்ளது.

திருப்பைஞ்ஞீலி
தேவஸ்தானம்
26—8—42

P. சுப்பையா பிள்ளை, B. A.
நிர்வாகத் தலைவர்

# உள்ளுறை


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | தலமும் இருப்பிடமும் ... | 5 |
| 2. | கோயிலின் அமைப்பு ... | 6 |
| 3. | தலத்தின் வேறு பெயர்கள் ... | 7 |
| 4. | மூர்த்திகளின் பெயர்கள் ... | 8 |
| 5. | தீர்த்தங்கள் ... | 9 |
| 6. | ஆலயத்திலுள்ள பிறகோயில்கள் ... | 10 |
| 7. | சுற்றுக் கோயில்கள் ... | 10 |
| 8. | முக்கிய திருப்பணிகளும் சீர்திருத்தங்களும | 10 |
| 9. | தலப்பெருமைகள் .. | 11 |
| 10. | கல்வெட்டுக்கள் .. | 13 |
| 11. | புராண வரலாறுகள் ... | 15 |
| | (1) தென்கைலாயப் பெயர் பெற்றது ... | 16 |
| | (2) அப்பருக்குக் கட்டமுது அளித்தது ... | 17 |
| | (3) யமனுக்கு அதிகாரங் கொடுத்தது ... | 22 |
| | (4) கலியுகராமபாண்டியன் அருள்பெற்றது | 23 |
| 12. | கர்ணபரம்பரைக கதைகள் ... | 26 |
| 13. | வழிபட்டோர் ... | 27 |
| 14. | பூஜைகள் ... | 28 |
| 15. | திருவிழாக்கள் ... | 28 |
| 16. | சொத்துக்களும் வருவாயும் ... | 28 |
| 17. | நகை வாகனங்கள் ... | 29 |
| 18. | ஆலய நிர்வாகம் ... | 29 |
| 19. | தனி நூல்கள் ... | 29 |
| 20. | தேவாரமும் தனிப்பாடல்களும் ... | 32 |

# திருப்பைஞ்ஞீலிக் கோயில் வரலாறு

*மதத மாமலா சூடிய மைநதனா*
*சிதத ராயததிரி வாாவினை தீாபபசால ,*
*பததா தாநதொழு தேததுமபைஞ ஞீலியெம*
*அதத னைதொழ வலலவா நலலரே.*

## 1. தலமும் இருப்பிடமும்

*எவ்வுயிர்ககுந தாயாகித தனனை அனபுடன அடைநதாாககுத தஞசமென நிறகும தனிப்பரஞ சுடராகிய தணணளி மிகுநத இறைவன, உலகததில உளள உயிர்கள தனனை வழிபடடு இனபுறும வண ணம, ஆஙகாஙகுளள பல கோயிலகளில எழுநதருளி யிருநது அருள் செய்து வருகினறான். தமிழ நாட்டில அததகைய சிவததலஙகள 274 உள்ளன. அவைகளுள் என்றும் வறறாத நீர் வளமுடைய காவிரியாயும் சோழ நாட்டில காவிரிககு வடகரையில உளள பல திருத்தலங் களில திருபபைஞஞீலி என்னும சிறந்த தலம் ஒனறு உளளது. பசுமையான ஞீலி எனனும் ஒருவகை வாழை யைக் கொணடுள்ளதால இததலம திருப்பைஞஞீலி எனப் பெயா பெறறது.*

*இததலம் திருசசி ஜில்லா லாலகுடி, தாலூகாவில திருசசிககு வடமேறகில 11 மைல தூரததில உள்ளது. திருச்சியிலிருந்து மண்ணசசநலலூர் வழியாயும், தொடையூர் வழியாயும, பாச்சூர் வழியாயும் இவ்வூரை அடையலாம். மணணசசநலலூரிலிருந்து மேறகில 4 மைல் தூரம் நலல கற்சாலையும், தொடையூரிலிருந்து*

வடக்கே 3 மைல வரை கரடு முரடான நடைப்பாதை யும் உணடு. இப்பதியைச் சுற்றிக் கிழககில 'மண்ணச்ச (மண்ணிறைச்ச) நல்லூரும், தெறகில பாணடிபுரம் என் னும சிறறாரும, மேறகில சிறுகாமபூரும, வடககில திரு, வெள்ளறை எனனும வைணவத தலமும உள்ளன.

## 2. கோயிலின் அமைப்பு

கோயில ஊருககு மததியில அழகாக அமைநதுள ளது. கோயிலின உளளேயிருநது வெளிவீதிவரையில 4 பிரகாரஙகள உளளன. 2-ம பிரகாரததில வாழைகள செழிதது வளாநதுள்ளன. 3, 4-வது பிரகாரஙகளுககுப பெரிய மதிலகளுடம வாயிலகளுடம உளளன. 4-ம பிரகா ரத்து மதில வாயிலில முடிவுபெருத முழுதும கருங கலலால, கடடபபடட பெரிய மட்டகோபுரம உள ளது. இது சுநதரபாணடியத தேவா காலததில ஏற பட்டதெனறுக் கூறுகினறனர். இதன வாயிலின உயரம சுமார் 35 அடி. அகலம 15 அடி. இதில உளள பழங கால மரககதவுகள மகமமதிய அரசாட்சியில எரிக்கப பட்டுத தறபோது வேறு கதவுகள இருககினறன. இக்கோபுர வாயிலிலும உள பிரகாரததிலும பல கல வெட்டுககள உளளன. ஆதனூா எனனும கிராமததில கோபுர வேலைககாக நிலஙகள விடபபட்டு வேலைகள் நடைபெறறு வநததாகக கோபுர வாயிலில உளள கலவெட்டினுல தெரியவருகிறது. கோயிலின விஸதீர ணம சுமாா 1,70,800 சதுர அடி. தெனவடல மதிலின நீளம சுமாா 305 அடி. கிழமேல மதிலின நீளம் சுமார் 560 அடி. புதுமைப் பொருளகள மலிநது விளஙகும இககாலத்தில இததலம மிகப பழமையானதாய் விளங்குகின்றது. இது ஒரு காலததில சீரும் சிறபபு

முறற நகரமாய் விளங்கியிருக்க வேண்டுமெனத தெரி கின்றது.

ஆலயத்துககு வெளியே விநாயகா அமர்ந்துள்ள வசநத மணடபம, 3-ம் பிரகாரததில உள்ள நூற்றுக் கால மணடபம, நடுவில உளள நாலுகால மணடபம, 2-ம பிரகாரததில உளள சுறறுப பிரகார மணடபம ஆகிய மணடபங்கள உள்ளன. வசநத மண்டபத்துக குப பினனே ஒரு நநதவனம உளளது.

## 3. தலத்தின் வேறு பெயர்கள்

இததலததிறகு கீலிவனம, கதலிவனம, அரம்பை வனம, அவுரிவனம, விமலாரணயம, தரளகிரி, முதது மலை, சுவேதகிரி, ஓஙகாரகிரி, பிரணவகிரி, வியாகரபுரி, வெளவரை, மேலைசசிதம்பரம, தெனகைலாயம் முதலிய வேறு பெயாகளும உணடு.

ஒரு வகை வாழையைக கொணடிருந்ததலால கதலி வனம அரமபைவனம எனறும, விமலையாகிய பாாவதி தஙகித் தவம செயததால விமலாரணயம, கீலிவனம் எனறும, வெணமை கலநத கறகளைக கொணடிருநதத லால தரளகிரி, முததுமலை, சுவேதகிரி, வெளவரை என றும, பிரணவமபோல அமைநதிருபபதால ஓஙகாரகிரி, பிரணவகிரி எனறும, கறகளில புலிவரிக கோடுகள அமைநதிருபபதால் வியாகரபுரி எனறும, வடகைலா யததிலிருநது ஒரு துணடு வநது விழபபெறறமையால தெனகைலாயமெனறும பெயர்கள பெறும. இததலம மிகவும் மேட்டுப் பாஙகான நிலப் பகுதியில அமைககப் பட்டு, ஆஙகாஙகுச சிறுசிறு பாறைகள கரிய புலிவரிகளு டன காணப்படுகினறன. இத்தலததிலுள்ள வாழையை ஒருவரும் உபயோகிப்பதில்லை. தெய்வமாகவே கருதி

போற்றுகின்றனர். இத்தலத்தில் தவம் செய்த பார்வதியின் கட்டளையால் தேவலோகத்துத் தேவரம்பைகளே வாழை மரங்களாயிருந்து நிழலைத்தந்து கொண்டிருக்கின்றனர் என்பது புராண வரலாறு. அம்பிகை மிகக் கருணையுடையவள். அதற்கு அறிகுறியாகவே மிகவும் ஈரமும் குளிர்ச்சியுமுள்ள வாழைகள் இவ்விடம் அமைந்தன போலும்.

## 4. மூர்த்திகளின் பெயர்கள்

இத்தலத்திலுறையும் பெருமானுக்குக் கதலி வசந்தர், நீலிவனநாதர், நீலகண்டர், சக்கரத்தியாகேசர், ஆரணிய விடங்கர் என்னும் பெயர்களும், அம்பிகைக்கு விசாலாட்சியம்மை, நீணெடுங்கண்ணி என்னும் பெயர்களும் அமைந்துள்ளன. திருமாலுக்குச் சக்கரம் கொடுத்த காரணமாகச் சக்கரத்தியாகேசர் என்றும், செயற்கையாய்ச் செய்யப்படாமல் வனத்தில் இயற்கையாய்ச் சுயம்புவாய் வெளிப்பட்ட காரணத்தால் ஆரணிய விடங்கர் என்றும், வாழையின் நிழலில் தென்றல் வீசும்படி தங்கியிருந்ததலால் கதலிவசந்தர் என்றும் பெயர்கள் வழங்கலாயின. தலவிநாயகர் வசந்த மண்டப விநாயகர் என்றும், நடராஜர் இரத்தின சபாபதி என்றும் பெயர்கள் வழங்கப்படுகின்றன. நடராஜர் சபை இரத்தின சபை. வசிட்ட முனிவருக்கு நடனக்காட்சி அளிக்கப்பட்டது என்பர். மகாமண்டபத்தில் நடராஜருக்குரிய ஒரு கல் பீடம் உள்ளது. நடராஜருக்குரிய விசேட அபிஷேக நாட்களில் இதற்கு அபிஷேகம் செய்யப்படுகின்றது. இத்தலத்தில் இரண்டு அம்மன் சந்நிதிகள் உள்ளன. பழமையான சந்நிதி கிழக்கு நோக்கியும், மற்றொன்று தெற்கு நோக்கியும்

உள்ளன. பழைய இடத்தில புதிய அம்மனையும், புதிய இடததில் பழைய அமமனையும் பிரதிட்டை செய்துள் ளார்கள். ஒருகாலத்தில பழைய இடததில இருநத அம்மன பின்னமடைந்து அதை அபபுறப்படுததிப் புதிய அமமனைப் பிரதிட்டை செயதபோது, திருபபணிககுக காரணமாயிருநத துரையூர ஜமீநதாருடைய கனவில அமமன தோனறித தனனை அபபுறப படுததாமல ஆலயததிலேயே அமைகக வேணடுமென வறபுறுததிய தால அநதப பழைய வடிவததையே தெறகு நோககிய புதிய சநநிதியில பிரதிட்டை செயதிருபபதாகக கூறுகினறனா. எனினும இவவடிவமே மிகச சோதியு டன துலஙகுகினறது.

## 5. தீர்த்தங்கள்

ஆதியில பாாவதியால உணடாககபபடடு இப பககம ஓடியதாகச சொலலபபடும விமலாரணய நதி இபபோது காணபபடவிலலை. இககோவிலைச சோநத தீரததஙகள மணிகாணிகை, அபபா தீரததம, தேவ தீரததம, அகனி தீர்ததம, யமதீரததம, கலயாண தீரத தம, விசால புட்கரிணி எனபன. இவறறுள தேவதீர்த் தம எனபது ஆலயததுககு வடககே உள்ள பெருங குளம. வசந்த மணடபததிறகு வெளியே உள்ளது அகனி தீரததம. இதில குளிப்பவாககு வெணகுட்ட நோய் நீஙகுவதாகக கூறுகினறனர். உள்ளே இரணடு அமமன சநநிதிகளுககும இடையில உள்ளது விசால புடகரிணி. இது அமபிகையான விசாலாடசியமமை யால உண்டாககப்பட்டது. இது விசால தடமெனவும பெயர் பெறும். இப்பககத்தில உள்ள நீர் நிலைகள நலல ஊற்றுக்களை யுடையன.

## 6. ஆலயத்திலுள்ள பிற கோயில்கள்.

(1) வசந்த மணடபத்திலுளள வசந்த விநாயகர் கோயில். இது தல விநாயகர் எனறு கூறப்படுகின்றது

(2) பெரிய கோபுர வாயிலை அடுத்துள்ளது சோறுடை ஈசுவரர் கோயில. அபபா சுவாமிகளுககுப பிராமண வேடததுடன வந்து சோறும நீரும தந்து காட்சி கொடுதத இறைவன இவ்விடததில மறைநத தாகக கூறுவா.

(3) இதறகு எதிரில உளளது துரையூா ஜமீன் தார்கள ஸதாபிதத காசி விசுவநாதா கோயில.

(4) இநதப பிரகாரததின் தெறகில யமன கோயி லும அதைச சேர்நத தீரததமும உளளன. இது நில மட்டததுககுக கீழே பாறையில அமைநதுளளது. இது பலலவர் வழிபட்ட கோயிலாயிருககலாமெனக கருது கினறனர்.

(5) சுவாமி சநநிதிககுப பினனே மகாலடசுமி (திரு மகள்) கோயிலும, திருமால கோயிலும உளளன. இவை கலியுகராமபாணடியன காலததில ஏறபட்டவை எனபர்.

## 7. சுற்றுக் கோயில்கள்

இவ்வூர சிவன கோவிலைச சோநதனவாக நீலிவனத தாயி எனனும பிடாரி கோயில, ஐயனுர் கோயில, பூஞ்ச்சியம்மன கோயில, ஆதாளி கோயில, மதுரை வீரசாமி கோயில எனனும கோயிலகள இருககினறன. அவைகட்குத தனியே பூஜைகள் நடைபெறுகினறன.

## 8. முக்கிய திருப்பணிகளும் சீர்திருத்தங்களும்

பழனி சிவம் என்பவரும மறறும உளள அன்பர் களும ஆகிய இவர்களுடைய முயறசியால் கோயில

பழுதுபார்க்கப்பட்டு 1934-ம் ஆண்டு கும்பாபிடேகம் சிறப்பாக நடைபெற்றது. பொன் தாடங்கம் என்னும் இரண்டு காதணிகள் செய்யப்பட்டு, சிருங்கேரி மடத்துப் பூஜையில சில தினங்கள் வைக்கப்பட்டுப் பிறகு இத் தலதது அமமனுக்குச சாததபபட்டுளளன.

சென்ற சில மாதங்களாகக கோயிலில சில புதிய திருபபணிகள செய்யப்பட்டுளளன. மதிலகளில ஊடு ருவிப் பதிந்திருந்த வேர்கள நீக்கப்பட்டு மதிலகள் பழுது பார்க்கபபட்டன. கோயிலுக்கு முன்னேயுளள நூற்றுக்கால மண்டபம் செபபனிடபபட்டு அதில தறபோது தேவஸதான காரியாலயம இருந்து வருகிறது. தேர் நிலையின மேல கட்டிடம புதுபபிக்கப் பட்டது கோயிலுக்குளளே இருள் மூடிக்கிடந்த இடங்களில வெளிச்சம உண்டாக்கப்பட்டது. சில வருடங்களாக நின்று போயிருந்த பிரமமோற்சவம சென்ற ஆண்டு முதல நடைபெற்று வருவதுடன இழுக்கபபடாதிருந்த பெரிய இரதமும ஓடி வருகிறது. கோயிலைச சேர்ந்த சுற்றுக கோயிலகளில ஒன்றாகிய நீலி வனத்தாயி அம மன கோயிலில திருபபணி தொடங்கபபெற்று முடிந்து நாளது சித்திரபானு௵ ஆவணி௴ 31௳ (16-9-42)ல கும்பாபிஷேகம நடைபெறுகின்றது. தறபோதுளள நிர்வாகத் தலைவரின ஊக்கததாலும, மற்ற அனபர் களின உதவியாலும இந்த திருப்பணிகள் நிறைவேறின.

## 9. தலப் பெருமைகள்

இத்தலதது மூல லிங்கம சுயம்புமூர்த்தி. துவஜ ஸ்தமபததுக்குப் பக்கத்திலுளள நந்தியும சுயம்பு என்று கூறபபடுகின்றது. மூல லிங்கத்துக்குப பின்னுளள சுவரில 27 விளக்குகள நட்சததிரங்களைபபோல ஏற்ற

படுகின்றன. 2-ம் பிரகாரத்தின் வெளிப்புறத்தில் பல வாழைகள் செழித்து வளர்ந்துள்ளன. சுவாமி சந்நிதிக்குப் போகும் வழியின் இரு பக்கங்களிலும் இரண்டு சோமாஸ்கந்த வடிவங்கள் உள்ளன. ஒன்று உத்தர கைலாசமூர்த்தி என்றும், மற்றொன்று தக்ஷிண கைலாசமூர்த்தி என்றும் வழங்கப்படுகின்றன. இவற்றுள் ஒன்று உத்தராயணத் தொடக்கத்தில், தைமாதம் முதலிலும், மற்றொன்று தக்ஷிணாயன ஆரம்பத்தில் ஆடிமாதம் முதலிலும் வெளிப்புறப்பட்டு ரிஷப வாகனத்தில் காட்சியளிக்கும். இவ்வாலயத்தில் நவக்கிரக வடிவங்கள் இல்லை. அதற்குப் பதிலாக துவஜஸ்தம்பத்துக்குப் பக்கத்தில் 9 குழிகள் அமைத்து அவற்றில் விளக்குகள் எரிக்கப்படுகின்றன. சுவாமி சந்நிதியில் உள்ள மண்டபத்திலும், அம்மன் சந்நிதியிலும் மேல் தளத்தில் மீன் வடிவங்கள் பொறிக்கப்பட்டுள்ளதால் இது ஒரு காலத்தில் பாண்டிய மன்னரின் ஆட்சிக்குட்பட்டிருக்கலாம் எனத் தெரிகிறது. சுவாமி சந்நிதியில் உள்ள முதல் பிரகாரத்திலும், வெளியிலும் இரண்டு சுரங்கங்கள் இருந்து அவற்றுள் ஒன்று கருவூலமாக உபயோகப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. தற்போது அவை இரண்டும் அடைபட்டுள்ளன. இத்தலத்தில் வசிட்ட முனிவருக்கு நடராஜர் நடனக்காட்சி அளித்ததாக ஐதீகம். திருநாவுக்கரசு சுவாமிகள் தல யாத்திரை செய்து இப்பதியைத் தரிசிக்க வரும்போது வெயிலின் வெப்பத்தால் வருந்த, அப்போது இறைவன் பிராமண வேடங்கொண்டு எதிரில் தோன்றிப் பொதி சோறும் தண்ணீரும் தந்து மறைந்தருளிய மாண்புடையது. கோவிலில் உள்ள இரண்டு துவஜஸ்தம்பங்களும் பெரியாண்டவர், சின்னாண்டவர் என்னும் தேவதைகளாகப் போற்றப்

பட்டு அவை இரண்டையும் மக்கள் மிக்க பக்தியுடன் வழிபட்டு வருகின்றனர். பிற ஆலயங்களில் உள்ளதைப் போல அல்லாமல் இவ்வாலயத்தில பள்ளியறை சுவாமி சந்நிதியில அமைந்துள்ளது. கோடைகாலத்தில் [illegible] வரட்சியுற்றிருந்த போதிலும் மாரிககாலத்தில் [illegible] கம் அமைந்துள்ள கொப்பகிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், முதல பிரகாரம் முற்றும் நீர ஊற்றுக்க ளால தண்ணீர நிறைந்து இறைவனின தண்ணருளைக் காட்டுகின்றது.

## 10. கல்வெட்டுக்கள்

இத்தலத்தின வெளியேயுள்ள பெரிய மட்டக் கோபுரத்திலும், ஆலயத்திற்குள சுவாமிகோயில அம மன கோவில மண்டபங்களிலும பல தமிழ்க் கல்வெட்டுகள உள்ளன. அவற்றுள சில பகுதிகள பினனே தரப பெற்றுள்ளன.

(1) மட்டக கோபுரத்தின இருபக்கத்துச சுவா களிலும பல கலவெட்டு வரிகள உள்ளன. அவைகளுள் தெனபுறச சுவரில உள்ளவை :—

மெலகொண்டான

உடையார திருபபைஞ்ஞீலி உடையார கொயில் தானககாரருககு கொயிலில் செயகிறத திருநிலை ஏழு கொபுரத திருபபணிககும பல திருபபணிக்கும வடலாக வளளுவப பாடி நாட்டில ஆதனூர நான்கெல்லை உட்பட்ட நனசெய புனசெயயும குளமும கரையும பொதுவும் பொகாதியும் உட்பட 31-வது முபபத்தொன்றுவது காரத்திகை மாதமுதல் இறையிலியாகத தநதோம. இநநாள முதல் கைக்கொணடு நன்செய் புன்செயயும் கமுகும கொழுந் தும் கரும்பும் செஙகழு நீரும உள்ளிட்டுத தாம வேண்டும பயன் செயது கொணடு வஜாதவரை செல்லுக்காக கலலிலும செமபி

லும் வெட்டி நான்கெல்லையிலும் கல்வெட்டி நாட்டிக் கொண்டு அனுபவிக்கல்."

வடபுறச் சுவரில் உள்ளவை:—

"நீலிவன அகவத்தி கோனேரினமை (கோனரோ இன்மை) கொண்டான உடையார் திருப்பைஞ்ஞீலி உடைய நாயனார் கோயில் தானதக்கு கரிகாலகனன வளநாட்டு மேலை வளநுவபபாடி நாட்டு பெரிய களளிகொடி நான கெலலைகருட்பட்ட நனசெய, புனசெய, நோகிலைமரம ஊாநததம உளபட இந நாயனார் கோயில் திருநிலை எழுகோபுரத திருபபணிகரும பலதிருப்பணிகளும் திருபபணிப் புரமாக பொனவரிகாசு கடமை பெறுவா. பல பேறு, இலாஞசினை பேறு, தறியிறை, செககிறை, தட்டாரபாட்டம, இடையாவரி, இனவரிகளும, புனசெயநாட்டு வினியோகம உட்பட்ட அனைததாயஙகளும வரியிலும கழிதது முபபததாருவது மாாகழி மாதம் முதல் இந்நாயனாருகரு முதலடஙக இறையிலியாகத தநதோம். இபபடிகரு இவவோலைபபடி பாடாகக் கொணடு இப்படி வஜாரிதது செலலுமபடியாக இவவூா நான கெலலையும திருச சூலஸதாபனமும பணணி கலலிலும செமபிலும வெட்டிக கொளக. இவை ஒருடையான எழுதது. இவை வாணவாரிய னெழுதது. யாணடு 36, நாள 154."

In the unfinished Gopura in the front of the Temple. A Record in the 31st year of Koneri Mel Kondan. (Inscriptions of the Madras Presidency.)

(2) கோயிலுககுள மண்டபச சுவாகளில உள்ள தமிழக கலவெட்டுககளின செயதிகள :—

1. சுவாமி சநநிதியின முதல பிரகாரததுத தென் சுவரில ராஜகேசரி வாமன் எனனும முதலாவது ராஜாதி ராஜ தேவ சோழன எனபவன (கி. பி. 1018—1052) தான பட்டததிறகு வநத 27-வது ஆணடில செய்து வைதத தான சாசனக குறிபபு

௨. அதே சுவரின் அடியில் பரகேசரி வர்மன் என்னும் முதலாம் ராஜேந்திர சோழதேவன் என்பவன் (கி.பி. 1012—1032) தனது பட்டத்தின் 6-ம் ஆண்டில் 185-வது நாளில் ஆண்டு தோறும் ஆராதனைக்காக 64 கலம் தானியம் கொடுக்க மூலதனமாக 150 பொற்காசுகளை மகாசபைக்கு எழுதி வைத்த தான சாசனக்குறிப்பு. (இவனுக்குக் கங்கைகொண்டசோழன், விக்கிரம சோழன், பண்டிதசோழன் என்ற வேறுபெயர்களும் வழங்குகின்றன. இவன் தன்பெயரால் ஓர் நகரம் அமைத்துக் கங்கைகொண்ட சோழீச்வரம் என்னும் ஆலயத்தையும் அமைத்துள்ளான்)

3. முதற் பிரகாரத்து வடசுவரில் ராஜகேசரி வர்மன் என்னும் முதலாவது ராஜாதி ராஜதேவ சோழன் என்பவன் (கி.பி. 1018—1052) கோயிலுக்குச் சில நிலங்களை 160 பொற்காசுகளுக்குக் கிரயம் செய்த சாசனக் குறிப்பு.

4. இரண்டாம் பிரகாரத்தில் அம்மன் கோயிலின் வடபுறச் சுவரில் பரகேசரிவர்மன் என்னும் இரண்டாம் ராஜராஜ தேவ சோழன் என்பவன் (கி. பி 1146—78) தன் பட்டத்தின் 25-ம் ஆண்டில் எழுதி வைத்த தான சாசனக் குறிப்பு.

This place (Tiruppangili) which figures in the old Tamil Poems and which was visited by Appar (to whom God is said to have given food) is noted for some curious legends and for a temple dedicated to the God of death. (I. M. P.)

## 11. புராண வரலாறுகள்

இத்தலத்திற்கு வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட புராணம் ஒன்றுண்டு. 25 அத்தியாயங்களைக் கொண்ட விரிவான வரலாற்றை யுடையது. சோழநாட்டில் கும்பகோணத்தில் இருந்து அரசு புரிந்த சந்திராபீட சோழனுக்கு அகத்திய முனிவர் திருப்பைஞ்ஞீலியின் மகத்துவங்களைச் சொல்லி யருளியதாகப் புராணங் கூறுகின்றது. அவ்வரலாறுகளில் சில கண்டுச் சுருக்கிக் கூறப்படும்.

## (1) தென்கைலாயப் பெயர் பெற்றது

முன் ஒரு காலததில தேவலோகத தலைவனை இந்திரன், தேவர்களும், முனிவர்களும, மறறைப் பரிவா ரஙகளும சூழத தனது அழகிய சிமமாசனத்தில வீற றிருநதான. அபபோது உலகததைத தாஙகுமபடியான ஆதிசேடன அஙகுவர இநதிரன அவனைப் பலவாறுகப் புகழ்நது வரவேறறுன. அவ்வார்ததைகளைக கேட்ட வாயுதேவன மிகவும வெகுணடு ஆதிசேடனைபபறறி இகழுநது பேசலானுன. ஆகவே வாயுதேவனுககும ஆதிசேடனுக்கும கோபம பொஙகி எழுநதது. இநதிரனு லும மறற எவராலும அவாகள கோபததைத தணிகக முடியவிலலை. 'இவர்கள கோபத்தைப பரமசிவன ஒருவனதான தீாககமுடியும', எனறு இநதிரனும மறறவர்களும தீர்மானித்தனர். பிறகு யாவரும கூட்ட மாயப் புறப்பட்டுக கைலாயததை அடைநது அஙகு வீறறிருககும சிவபெருமானிடம அணுகி வாயுதேவ னுககும, ஆதிசேடனுககும உண்டான பகைமையையும, அவர்கள் தாமதாம பெரியவர் எனறு கொண்டுள்ள காவததையும முறையிட்டனா.

அவைகளைக கேட்ட சிவபெருமான அவர்கள கர் வம அடஙக ஒரு சூழசசி செயதார். கைலாயமலையை ஆதி சேடன இறுகபபிணிததுச சுறறிக் கொளளவும, வாயுதேவன தன பலஙகொணடமட்டும காறறை வீசி ஆதிசேடனுடைய பிணிபபைத தளர்ததவும கட்டளை யிட்டு, இருவருள எவர்தம செயலில வலலவரோ அவரே பெரியவர் என்று தீர்மானித்தார். அவ்வாறே ஆதி சேடன் கணகளில நெருப்புப் பொறி சிந்த மிகவும் வெகுண்டு தன்நீணட உடலால் கைலாயமலையைச் சிறி

தும •இடமின்றிச் சுற்றி வளைத்துக் கொண்டான் வாயுதேவனும தன் முழுபலங் கொண்டு சண்ட மா( தததை வீசினுன். உலகம் யாவும் அதிர்ந்தன. உயிர்கஎ தததளித்தன. முனிவரும் பிறரும கலக்கங கொணட னர். இறைவனுடைய குறிபபினுல ஆதிசேடன தல பிணிபபைச் சிறிது தளாததினை. அப்போது கைலி மலையிலிருநது எட்டுத துணடுகள கிளமபி வேகமாக பறநது வநது தெனதிசையில விழுநதன அமமலை துணடுகள விழுநத இடஙகள திருககாளததிமலை, தி சிராமலை, இலஙகைத திருககோணமலை, ரஜிதகிரி, நீரத கிரி, சுவேதகிரி, திரு ஈங்கோயமலை, இரததினகிரி ஆகிய இடஙகளாகும. இவறறுள சுவேதகிரி எனபதே திரு பைஞ்ஞீலி எனனும தலமாகும. சுவேதகிரி எனபது வெணமையானமலை எனப பொருளபடுத தெனமை லாயம என வழஙகும. வெணமையான படிகமணிகளின் இடையில மாணிககம விளஙகுவதுபோல, வெண்மை யான மதிறகறகளின மததியில பெருமான விறறிரு கினருா.

(2) அப்பருக்குக் கட்டமுது அளித்தது

திருமுனைபபாடி நாட்டில சகல செலவஙகளுட நிறைநத திருவாமூர் எனனும திருபபதியில சைவ வேளாளா மரபில குறுககையா குடியில கி. பி. 6-ம் நூறறுணடில புகழ்மிகக புகழனுா எனபவர்ககும, மாதி சிறநத மாதினியாா எனபவாககும புதலவராகத திரு நாவுககரசா திரு அவதாரம செயதாா. இவா பிறந் போது மருள நீககியார் என அழைக்கப பட்டார். இவ ருககுத் திலகவதியார் எனனும அருமைத தமககையா ஒருவர் உணடு. திலகவதியாரைக் கலிப்பகையார் எனபவ ருக்குத் திருமணம செய்து கொடுக்கப் பெற்றுே

எண்ணி யிருந்தனர். கலிப்பகையார் போர்மேற் சென்று இறக்கவே திலகவதியாரும அவரையே கணவரெனக் கொணடு தம தமபியாரின் பொருட்டு உயிர்வாழநது வநதார். பெறறோர்களும, காலஞ் செனறனர். மருள நீககியார் கறக வேணடியவைகளைக் கறறு, கறறபடி ஒழுகி மனிதப் பிறவியைப் பெற்றதனுல அடையுமபேறு என்ன வென்று ஆராயநது வரலானுா. இவ்வாறு வாழநது வருமபோது மருள நீககியாா அககாலததில பரவியிருநத சமண சமயததின கூட்டஙகளுககுச் சென்று அவர்களுடைய உபதேசஙகளே உறுதியெனக் கொணடு சமணமததிற் சோநது தருமசேனர் என்றும பெயாபூணடு வாழநது வநதார். தமமையும கைவிட்டுத தமபியாா சமண சமயததிற பிரவேசிததலைத திலகவதி யாா எண்ணி எணணித துககஙகொணடு திருவதிகைப பெருமானிடம முறையிடடுவநதாா. பெருமான அமமை யாரின முறையீட்டைக கேட்டு மருள நீககியாரை மீண டும சைவ சமயததிறகுக கொணடுவரக கருதி அவருக குச சூலைநோய என்னும கொடிய வியாதியை மறக கருணையால வருமாறு செயதாா. மருளநீககியாா அந நோயினுல மிகவும துனபுறறுப பலவகைக சிகிசசை களைச செயதும பயனபடாமல திருவருள தூணட திருவதிகையில உள்ள தம தமககையாரிடம வநது சோநதாா. திலகவதியாரும சூலை நோயால துனபுறும தம தமபியாரைத திருவதிகை ஆலயத்திறகு அழைதது்ச் சென்றுா. மருணீககியாா இனிய செநதமிழச சொற்களால " கூறறுயினவாறு " என்னும் பதிகம பாடி இறைவனைத துதிததார். சூலைநோயும நீஙகியது. அப் போது அவருக்குத திருநாவுக்கரசர் என்னும் திருநாமம் கிடைத்தது. இவருககு அப்பர், வாகீசர், ஆளுடைய

அரசு, சொற்கோ, வாக்கின் மன்னர், தாண்டகவேந்து முதலிய வேறு பெயர்களும் உண்டு. திருநாவுக்கரசர் அவ்விடத்தில் சில நாள் தங்கியிருந்தார். இவ்வாறு இருக்கப் பாடலிபுத்திரத்தில் இருந்த பல்லவ அரசன் நாயனார் மீண்டும் சைவ சமயத்தில் சேர்ந்துவிட்டார் என்பதை அறிந்து அவரை வரவழைத்துப் பலவாறு துன்புறுத்தினன். அவரை நீற்றறையில் வைத்தும், நஞ்சு கலந்த உணவைக் கொடுத்தும், மதயானையைக் கொண்டு கொல்விக்கவும் முயன்றான். அரசன் செயல் யாவும் வீணாயின. முடிவில் திருநாவுக்கரசரைக் கல்லுடன் சேர்த்துக் கட்டிக் கடலில் இடுவித்தான். இறைவன் திருவருளால் அக்கல்லே மிதவையாயிருந்து நாயனாரைக் காப்பாற்றியது. நாவுக்கரசர் கடலில் மிதந்து திருப்பாதிரிப்புலியூர்க் கரையில் வந்து ஏறினார். இன்றும் அவர் கரை ஏறிய இடம் கரையேறிக் குப்பம் என வழங்குகின்றது. இந்த அற்புதங்களைக் கேட்ட சமண அரசன் சைவனாகிச் சிவபெருமானை வழிபட்டுப் பல திருப்பணிகள் செய்தான். நாவுக்கரசர் திருப்பாதிரிப் புலியூர் இறைவனைத் தரிசித்துப் பதிகம் பாடித் துதித்தார். அதுமுதல் நாயனார் பல தலங்களுக்கும் சென்று பதிகம் பாடியும், உழவாரப் படையால் புல் செதுக்குவதாகிய திருத்தொண்டைச் செய்தும் வழிபட்டு வந்தார். பிறகு சீகாழியில் உலகமுய்ய அவதரித்து ஞானப்பாலுண்டு தமிழ்ப்பாக்களைப் பாடிய திருஞானசம்பந்த சுவாமிகளைச் சந்தித்து அவருடைய நட்பைப் பெற்று இருவருமாகப் பல தலங்களைத் தரிசித்தார்கள். அப்போது திருநாவுக்கரசருக்குத் திருஞானசம்பந்தரால் அப்பர் என நாமம் அருளப்பட்டது. அப்பர் சுவாமிகள் பல அற்புதங்களைச் செய்தார். திருமறைக்காட்டில் பல

காலம் மூடப்பெற்றிருந்த திருக்கோயிற் கதவைப் பதிகம் பாடித் திறந்தார். திருவீழிமிழலையில் இறைவனால் படிக் காசுப்பெற்றுப் பஞ்சத்தால் வருந்திய அடியார்களைக் காப்பாற்றினர். திருவையாற்றுக்கடுத்த திங்களூரில் அப்பூதியடிகளுடைய புதல்வன் பாம்பு கடித்து இறக்க அவனைப் பதிகம் பாடிப் பிழைப்பித்தார். இவைபோன்ற பல செய்தற்கரிய செயல்களைச்செய்து சோழநாடு சென்று காவிரியின் இரு கரைகளிலும் உள்ள தலங்களைத் தரி சித்து வந்தார். தென் கைலாயமாகிய திரிசிராப்பள்ளி, திருவானைக்காவல், திருப்பாச்சிலாச்சிராமம் என்னும் திருவாசி ஆகிய க்ஷேத்திரங்களைத் தரிசித்தார்.

பிறகு அப்பர் சுவாமிகள் தேவதேவனை சிவ பெருமான் வீற்றிருக்கும் திருப்பைஞ்ஞீலியை அடைந்து வணங்குவதற்கு மிகுந்த ஆவலுடையவராய வடதிசை நோக்கி வழிநடக்கலாயினா. கடுங்கோடையின் உச்சிப் பொழுதில் காலவலியுங் கருதாது பெருமானிடம் வைத்த அன்பு காரணமாய் நடப்பதற்கரிய பரற்கற்கள் படர்ந் துள்ள வழியே நடந்தேகினா. கானலால் மிகவும் களைப் புற்றனா.

உற்ற இடத்து உதவுபவனும், ஆபத்சகாயனும், உண்மையடியார் உள்ளத்தில் ஊற்றெடுத்து விளங்கு பவனும், பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரி வுடையனும், திருப்பைஞ்ஞீலியில் கோயில் கொண் டவனும் உள்ள இறைவனா தன் பெருஞ்சடையையும், தன் கையில் உள்ள மானையும் மழுவையும் மறைத்து, விபூதி முதலிய சிவசின்னங்களைத் தரித்த ஒரு வேதிய ரின் உருவங்கொண்டு தோன்றிப் பொதிச்சோறு சுமந்து அப்பர் சுவாமிகள் நடந்துவரும் வழியில் ஒரு சோலையை யும் பொய்கையையும் உண்டாக்கி அப்பர் சுவாமிக

ளிடம் அணுகி, "யாம் பைஞ்ஞீலிப் பெருமானைப் பூஜிக்கும் அர்ச்சகர். இப் பொதிசோற்றை உண்டு நீரருந்தி சோலையில் இளைப்பாறிய பிறகு செல்லலாம்" என்றனர். பிரயாணத்தால் அயாசமுற்ற அப்பரும் கட்டமுதை உண்டு நீரருந்தி இளைப்பாறினார்.

சொல்லிறைவ ரன்பு துணையாய நடுப்பகலிற்
கல்லதாசென் றெய்தத் துவருநதானின வழியருகில
ஒல்லைதரு நீழற்ட முண்டாக்கிக் கட்டனநோளை
வல்லவராயச் செஞ்சடையு மானுமழு வுங்கரந்து.

பூதி யணிந்துகண்டி பூண்டுமூந்நூன் மார்பிலங்க
ஆதிசிவ வேதியரா யாங்குற்றவ னப்பரைப்பார்த்
தோதுசிவ வேடமுடை யீர்வருந்தி யெங்குப்
போதிரெனற வேதியாகப் போதிலனப ரீதுசொல்வார்

விணபரவு பைஞ்ஞீலி மேவலெனறு ரிபபொதிசோ
றுணபிரிதி னீரருந்தி யுறறிளைப்பா றிச்செலுவீர்
எணபெருமைப் பைஞ்ஞீலி யீசாக்க ருச்சகராயாம்
வெணபொடியீ ரெனறுரைசொல வேந்தரவை செயதுவந்தார்.

பிறகு அப்பரும், வேதியராய் வந்த விமலரும் நடந்து சென்று திருப்பைஞ்ஞீலிக் கோயிலை அடைந்தனர். கோயிலின் கோபுரத்தை அணுகியவுடன் துணைவராக வந்த வேதியர் மறைந்தார். அப்பரும் மனமதளர்ந்து பெருமானைப் பலவாறாகத் துதித்தார். கருணையே உருவாகக் கொண்ட பைஞ்ஞீலிப் பெருமானும் பார்வதி சமேதராய் இடபவாகனத்தில் காட்சி கொடுத்தார். அப்பரும் சில காலம் அவ்விடத்தில் தங்கி உழவாரத் திருப்பணி செய்து வந்தார். அப்பருக்குக் கட்டமுதளித்த உற்சவம் ஆண்டு தோறும் சித்திரைமாதம் அவிட்ட நட்சத்திர தினத்தில் மிகச் சிறப்புடன் நடைபெற்று வருகின்றது.

## (3) யமனுக்கு அதிகாரங் கொடுத்தது

சிவபக்தரான மிருகண்டு முனிவர்க்கு மார்க்கண்டன் என்பவன் புதல்வனாகத் தோன்றிச் சகல கலைகளையும் கற்று அறிவில் மிக்கானாய் யாவரும் புகழும்படி வளர்ந்து வந்தான். அவன் பதினாறு ஆண்டே உயிர் வாழ்வன் எனச் சிவபிரான் அருளியிருந்தார். அவனுக்குப் பதினைந்து வயது நிறைந்தபோது பெற்றோர் அவனுக்குக் கிடைத்த அற்ப ஆயுளை எண்ணி வருந்தினர். இதை யறிந்த மார்க்கண்டன் திருக்கடவூரில் உள்ள சிவபெருமானின் பாதமே அடைக்கலமென்று பூஜை செய்தான். பூஜையையும் கவனியாமல் யமன் மார்க்கண்டனைப் பாசத்தால் பிணித்தான். அப்போது சிவபெருமான் கோபத்துடன் தோன்றி யமனைப் பாதலத்தில் விழும்படி உதைத்துத் தள்ளி மார்க்கண்டனை என்றும் பதினாறாக இருக்கச் செய்தார். யமனும் வீழ்ந்து இறந்தான். யமபுரியும் அழிந்தது. யமன் இறந்த காரணத்தால் உலகத்தில் உள்ள உயிர்வகைகள் யாவும் இருக்க இடமின்றிப் பெருகின. மலைகளிலும் வனங்களிலும் உயிர்கள் நிறைந்தன. நீரில் வாழும் உயிர்களும் நிரம்பின. உலகத்தில் புண்ணியங்கள் குறைந்து பாவங்கள் நிறைந்தன. நால்வகை மரபினரும் தங்கள் தங்கள் கருமங்களை விட்டனர். கோயில்களில் பூஜைகள் குன்றின.

இவ்வாறிருக்க, திருப்பைஞ்ஞீலியைச் சூழ்ந்துள்ள இடங்களில் மட்டும் வழக்கம்போல் உலக காரியங்கள் நடைபெற்று வந்தன. பிற ஆலயங்களில் உள்ள சிவ கலைகள் யாவும் இத்தலத்தில் வந்து சேர்ந்தன. யமன் காரணமாகச் சிவபிரானுக்குண்டான கோபம் நீங்கா

திருப்பணிதக் கண்ட பிரமன், திருமால், இந்திரன், பூமி தேவி முதலியோர்கள் திருப்பைஞ்ஞீலிககு வந்து பல காலம தவம் செய்தார்கள். சிவபெருமான் அவர் களுக்கு ரிஷப வாகனததில காட்சி கொடுத்து அவர்கள் குறைகளைக கேட்டு வேண்டிய வரஙகளைத தந்தார். சிவ பெருமான், கோயிலின தென திசையில பாதலத்தில ஒரு பிலதது வாரததின வழியே யமனை வரவழைததார். சூரியன புதலவனான யமனும வணஙகினர்னன. சிவ பெருமான யமனுககு உணமைச சிவபகதாகளைக கிட்ட லாகாது என்று பல உபதேசஙகளைச செயது அவனுககு முனபோலவே அழிததல தொழிலையும அதிகாரததையும கொடுததருளினா. இதனால் இததலதது இறைவருககு அதிகார வலலவா என்னும பெயரும உண்டு. இததலத தில வாழும உயிாகளுககு மரணவேதனையிலலை. இவ்வர லாற்றிற்கு அடையாளமாக ஆலயததின தெனபககத தில பூமிககடியில யமன கோவிலும, யமதீாததமும உளளன.

## (4) கலியுகராம பாண்டியன் அருள் பெற்றது

செநதமிழ நாடான பாணடிய நாட்டில பல வளங களும நிறைநத தலைநகரான மதுரைப பதியில பாணடிய குலததில மிகுநத புகழ் பெற்றவனும், பகையரசாகள யாவரும திறைகொணடுவநது வணஙகத தகக வலிமை யுடையவனுமான கலியுகராம பாணடியன எனபவன நீதியுடன அரசு புரிநது வந்தான. அவன பூர்வத்தில செயத தீவினையின பயனால வெணகுட்ட நோயககு ஆளாகி வெளுதத நணடைபபோல இரததம குன்றி மிகவும துனபபபட்டு வநதான. அநநோயினால துன புறற மறற அரசர்களான பாணடுவெனன, சிஙகவாம

னென்ன ஆகிய இவர்களைப்பற்றி எண்ணுவான். தனக் குற்ற நோய் நீங்கும்படி பல சிகிச்சைகளைச் செய்தும் அவை பயனபடாது ஒழிநதன. கோயிலில் பல பூஜை கள செய்விததான். பல. முனிவர்களிடம சென்று வியாதி நீஙக வேணடினன. ஒன்றினாலும நோய் நீஙகாதபடியால மனம் வெறுததுக காசி யாததிரை செலல உறுதி கொண்டு முதலில திருநெலவேலிககுச சென்று, ஆஙகு தாமபிர சபையில் எழுநதருளி யுளள பெருமானைத் தரிசனம் செய்து அவ்விடததில் தஙகியிருந்தான. அப்போது உணமை அடியாருள்ளத் தில உறைபவரும், திருப்பைஞ்ஞீலி இறைவரும ஆகிய நீலிவனநாதர் பாணடியனை அடிமைகொணடு அருள் செயயவேணடி' அவன கனவில சென்று " உனககுற்ற நோய நீஙகி உனது உடலெல்லாம இரததினம்போல பிரகாசிககச் செய்வோம. காசி யாததிரை போவதை நிறுத்து. யாம் திருப்பைஞ்ஞீலிப பதியில இரததின சபை யில நடனம் செய்வோம" என்று சொலலி மறைநதார.

தூககத்திலிருநது விழிதத பாணடியனும் மனத துயர் நீஙகி மகிழசசிகொணடு இறைவன அருளியபடி திருபபைஞ்ஞீலிக்குத தன சேனையுடன விரைநது சென ருன. இடையிலுளள பல வழிகளைக் கடநது சோலை களும வாவிகளும் சூழநத நீலிவனமாகிய திருப்பைஞ் ஞீலியின் எலலையைக கண்டான. தன உடல் முழுதும பூமியில படும்படி கீழே விழுநது வணஙகி எழுநது மெய்மமறநது தன் இருகைகளாலும அஞசலிசெயது பிரார்த்திததான. "சொலவதறகு அரியதாயும், பகத ருடைய உளளமாயும, தென கைலாயமாயும விளஙகு கின்ற இநத ஸதலத்தைக காணபதறகு என்ன தவம செயதேனோ" என்று வியந்தான.

சிவனருளையும் குருமுகத்தால் பெறவேண்டுமென்ற எண்ணங்கொண்டு, உடம்பு வற்றும்படி பல விரதங்களையும், தவங்களையும் ஆற்றிவந்த வசிஷ்ட முனிவரையும் தாற்பிய முனிவரையும் தரிசித்து வணங்கித் தான் பெருநோய் காரணமாக வருந்துவதையும், சிவபிரான் கனவில் அருளியதையும், தான் புறப்பட்டுவந்த வரலாற்றையும் தெரிவித்தான்.

அவ்விரு முனிவரும் அரசனுக்குச் சில உபதேசங்களைச் செய்தார்கள். திருப்பைஞ்ஞீலிப் பதியில் உள்ள எட்டுத் தீர்த்தங்களிலும் மூழ்கி, அட்ட லிங்கங்களையும் தொழுது வழிபட்டுவந்தால் அரசனுக்குற்ற குட்டநோய் தீரும் எனத் தெரிவித்தனர். பாண்டியனும் அம்மொழியைச் சிரமேற்கொண்டு எட்டுத் தினங்கள் வரையில் அட்ட தீர்த்தங்களில் மூழ்கி அட்ட லிங்கங்களைப் பூஜித்து வந்தான்.

பிறகு ஒருநாள் அரசன் காவிரியில் நீராடிச் சிவ சின்னங்களுடன் ஆலயத்தின் கோபுரவாயிலைக் கடந்து பக்தியுடன் உள்ளே சென்று சந்நிதியில் உள்ள ரிஷபக் கொடியைக் கண்டான். அக்கணமே அரசனைப் பீடித்திருந்த வெண்குட்ட நோயும் நீங்கியது. அவன் வடிவம் பொன் எனப் பொலிந்தது. அரசனும் தன் புது உடலைக் கண்டு தரித்திரனுக்குத் தரணியாளும் பேறு கிடைத்தாற்போல மகிழ்ந்தான்; திருவருளை வியந்தான். ஆடிப் பாடித் துதித்தான். உள்ளே சென்று தனக்கு அருள் செய்த நீலிவனநாதரையும், விசாலாட்சி யம்மையாரையும், இரத்ன சபாபதியையும் மெய்ம்மறந்து வணங்கினான். பலதானங்களைச் செய்தான். திருப்பைஞ்ஞீலிக்குத் தெற்கே பாண்டிபுரம் என்னும் ஒரு நகரம் அமைத்து அதில் இருந்துகொண்டு மற்ற அரசர்கள் போற்றும்படி

வாழ்ந்து வரலானன். அவ்வூருக்குத் தெறகில காவிரிக்கு வடகரையில ஓர் சிறு ஆலயம ஏற்படுத்தி வடமதுரை எனறு பெயரிட்டுத தான வழிபட்டுவந்ததுடன் மறறை யோரையும வழிபடுமபடிச செயதான. திருப்பைஞ்ஞீலி ஆலயததிறகு முன்னே ஓர இரட்டைக கோபுரம கட்டு விததுத தன பெயரால விளஙகுமபடிச செயதான. மேலும சுறறுமதிலகள, பல மணடபஙகள, மடைப பளளி, லட்சுமி, துாககை ஆகிய தெயவஙகளுககுக் கோயிலகள முதலிய திருபபணிகளைச செயதான. வசிட்டா, தாறபியா ஆகிய முனிவாகளுககுரிய பாண சாலைகளை அமைததான. பெருமானுககுரிய புதிய திரு வாபரணஙகளைச செயவிததான. இவ்வாறு ஆலயத தைப புதுமைசெயது தினபபூஜை, மாதவிழா, வருட விழா முதலியன நடைபெறுமபடிச செயதான். பசிப் பிணியால வருநதும மககளுககு உதவுமபடி பல அனன சததிரஙகளை அமைததான. இவ்விதம கலியுகராம பாண டியன பல புணணியஙகளைச செயது பனனாள வாழநது இறைவன திருவடியடைநதான. இததலம பாணடிய ரின ஆட்சிக குட்படடிருநததறகு அடையாளமாக ஆலய மணடபஙகளின் மேலதளததில பாணடியருக் குரிய மீன உருவஙகள பொறிககபபட்டுள்ளன.

## 12. கர்ண பரம்பரைக் கதைகள்

**(1)** ஆதிகாலததில இககோயிலின மூலலிஙகம மட்டும சுயமபுவாய்த தோனறிச சுறறும புதா சூழநது மூடியிருநததெனறும, அபபோது ஊரிலுள்ள பசுககள புதாப்பககஙகளில சென்று வயிறார மேயந்து தமமையு மறியாமல பால சொரிநதனவெனறும, அப்பசுககள தததம வீடுகளுககுச சென்று உடையவர்கள கறககும

போது பால் குறைந்ததென்றும், பின்பு அவர்கள் மேய்ச்சலிடமான புதர்களிடம் சென்று மண் வெட்டியால் வெட்டும்போது அவ்விடத்திலிருந்து உதிரம் வெளிப்பட்டதென்றும், மேலும் ஆராயும்போது ஆங்கு ஓர் லிங்கம் தோன்றியதென்றும், அதை யாவரும் பக்தியுடன் வழிபட்டு வந்தார்கள் என்றும், பிறகு அவ்விடம் ஆலயமாக விளங்கியது என்றும் கதைகள் சொல்லப்படுகின்றன.

(2) ஒரு காலத்தில் கோயில் குருக்களும், பரிசாரகரும், வேறு சிலரும் இத்தலத்திலிருந்து புறப்பட்டு, ஆடி மாதம் 18-ல் கொள்ளிட நதிக்கரைக்குச் சென்றதாகவும், அப்போது அவர்களுக்கு ஆற்றில் சில விக்கிரகங்கள் அகப்பட்டதாகவும், அவற்றை எடுத்து வந்து இவ்வூரில் பிரதிட்டை செய்துப் பலியிட்டுப் பூஜை செய்து வந்ததாகவும், அவ்விக்கிரகங்களால் பல அற்புதங்கள் நிகழ்ந்ததாகவும், பின்பு அவைகளை வேறு தனியிடத்தில் வைத்துக் கோயில்கள் அமைத்ததாகவும் கூறப்படுகின்றன. நாளடைவில் பெரிய கோயிலில் உள்ள இரண்டு துவஜஸ்தம்பங்களும் அவற்றின் அம்சங்களாகக் கருதப்பட்டுப் பெரியாண்டவர், சின்னாண்டவர் என்று வழங்கப்பட்டுப் பூஜிக்கப்பட்டு வருகின்றன.

## 13. வழிபட்டோர்

பிரமன், திருமால், தேவேந்திரன், முசுகுந்தன், காமதேனு, வசிட்டர், இராமர், இலட்சுமணர், அர்ச்சுனன், கலியுகராம பாண்டியன், தாற்பிய முனிவர், வியாக்கிரசூரன், சுதர்மன், அங்கமித்திரன், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்திகள் ஆகியோர் இத்தலத்திலுள்ள இறைவனை வழிபட்டுப் பெருமையடைந்துள்ளார்கள். கலியுகராம பாண்டியன் வழிபட்டதற்கு அவன் அமைத்த கோயில்களும் கோபுரமும் உள்ளன. வியாக்கிரசூரன் புலி உடலைப் பெற்றவன். தான் இறக்கும்போது தன் புலி வடிவம் இவ்வூர்க் கல்லில் இருக்க வேண்டுமென வேண்டிக்கொண்டதாகவும், அவ்வாறே

இவ்வூர் மதிலிலும் கோபுரத்திலும் புலிவரிகள் அமைந் திருப்பதாகவும் புராணம் கூறும்.

## 14. பூஜைகள்

இவ்வாலயத்தில் தினந்தோறும் காலை, உச்சி, மாலை இரவு ஆகிய நான்கு காலங்களிலும் அபிடேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. மாலை, இரவுப் பூஜை நேரங்களில் சின்ன மேளமாகிய நாட்டியமும் பெரிய மேளமும் நடைபெறுகின்றன. இவை நான்கும் சாக்கார் கட்டளையில் நிகழ்கின்றன. தேவதாசிகள் கையில் மந்தார மலர்களை வைத்துக்கொண்டு ஆடிப்பாடி வழிபடுவார்கள்.

## 15. திருவிழாக்கள்

ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் பிரமோற்சவமும், பௌர்ணமியில் திருத்தேர் விழாவும், சித்திரை மாதம் அவிட்ட நட்சத்திரத்தில் அப்பர் கட்டமுது உற்சவமும், புரட்டாசியில் நவராத்திரி உற்சவமும், ஐப்பசியில் கந்த சஷ்டி உற்சவமும் நடைபெறுகின்றன. இவையன்றித் தைப்பூசத் தினத்தன்று சுவாமி கொள்ளிடக் கரைக்குப் புறப்பட்டுச் சென்று தங்கி, இரவில் சுவாமி குதிரை வாகனத்திலும், அம்மன் பல்லக்கிலும் காட்சியளித்து ஊர் திரும்பும். அப்பர் கட்டமுது உற்சவத்தின்போது வழிகளில் அடுத்தடுத்துத் தண்ணீர்ப் பந்தல்களை அமைத்து வழி நடப்போர்க்கு உபசாரம் செய்வர்.

## 16. சொத்துக்களும் வருவாயும்

இக்கோயிலுக்குத் தனியே 5 காணி நன்செய் நிலங்களும், இறும் மேலவார் உரிமையில் திருப்பைஞ்ஞீலி, ஈச்சம்பட்டி, வாழைமலைப் பாளையம், கவுண்டன்பட்டி, மூவராம் பாளையம் முதலிய கிராமங்களில் 5000 காணி நிலங்களும் உண்டு. இவைகள் மூலமாய வருடத்தில் சுமார் ரூ. 7000-மும், ஞாயிற்றுக்கிழமைகளில் இவ்வூரில் கூடும் சந்தையின் மூலம் ரூ. 280-ம் கிடைக்கின்

றன. கோயில் சிப்பந்திகள் 64 பேர்கள் உள்ளனர். இவர்களுக்கு மானியமாக 700 காணிகள் விடப்பட்டுள்ளன.

## 17. நகை வாகனங்கள்

கோயிலுக்குச் சுமார் ரூ. 2000 மதிப்புள்ள திருவாபரணங்களும், ரூ. 1000 மதிப்புள்ள வாகனங்களும், ரூ. 5000 மதிப்புள்ள ரதமும் உள்ளன

## 18. ஆலய நிர்வாகம்

திருச்சி லாலகுடி சர்க்கிள் தேவஸ்தான கமிட்டியின் மேற்பார்வையில் இக்கோயில் இருந்துவந்து பிறகு 1939-ம் வருஷம் மார்ச் மாதம் முதல் சென்னை இந்துமத தாம பரிபாலன பாதுகாப்பு போர்டு (Hindu Religious Endowments Board) நிர்வாகத்திற்குட்பட்டு நிர்வாகத் தலைவர் (Executive officer) ஒருவரின் மேற்பார்வையில் ஆலய காரியங்கள் நடைபெற்று வருகின்றன. மேலும் இருவர் இவ்வாலயத்திற்குக் கௌரவ தர்மகர்த்தர்களாகத் தற்போது இருந்துவருகின்றனர். தற்போதுள்ள நிர்வாகத்தலைவரின் ஊக்கத்தால் கோயில் காரியங்கள் செவ்வையாய் நடைபெற்று வருவதுடன், சிறிது மூலதனமும் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது.

இச்சிறு வரலாற்றைப் படிப்போர் யாவரும் பின்னே சேர்க்கப் பெற்றுள்ள துதிப்பாடல்களையும் பக்தியுடன் பயின்று திருப்பைஞ்ஞீலி நாதரின் திருவருளைப் பெற்று எண்ணிய பயன்களை எளிதில் எய்தித் துன்பம் நீங்கி இன்ப வாழ்வு பெறுவார்களாக. நீலிவன நாதரின் திருவருள் எங்கும் நிலவுக.

## 19. தனி நூல்கள்

(1) திருப்பைஞ்ஞீலிப் புராணம். இந்நூல் வடமொழியிலிருந்து மெய்ப்பாத புராணிகரால் மொழி பெயர்க்கப்பட்டது. 25 அத்தியாயங்களைக் கொண்டது.

## தல விநாயகர்

நிதிபெரு வளங்களும் நிகரில் கல்வியும்
கதிகருமெய்ஞ் ஞானமும கதிகக்த தந்திட
மதித்தலைஞ் சீலியின வசந்த மண்டபத
ததிசகையா னிணையடி துதித்துப போற்றுவாம.

## முருகப் பெருமான்

2. பாகைநிகாத திருசுரகுஞ சரிசொலமு
தெனவமுத பதத்தை நேராய
நாகநகாப பெருமபதஞ்சிற றிடைகொடிககுப
படைகொடிகள நாகரீக
மாகனகக குவட்டிபங்க ளைகொடுத்தும்
புனாநதானை மயூரத தோகை
வாகனனைக குறவளிதை மோகனனைக
குகனையனபின வணங்கு வோமே

## சிவபெருமான்

3. பரதார விந்தபரா பரைதனில மாயா
தருவுற பதகி யாகிய
பூதாதி நாதமெழும பணகளவிரித
தகிலாணட புவன கோடி
யீதான கனிகளைததரு துயிரவரிவண
டினங்களுணடு விளங்க நோககி
யாதார மாகியபைஞ் சீலிங்கத
னடிவணங்கி யருளைச சாரவாம்.

## இரத்ன சபாபதி

4. துதியைமொழிந திதயிகுபத தியினையுணாந
தருசசனைசெய தொடாபை வேதன
விதியைவெலுந திறநதருசந நிதியையக
லாதிருககும விருபபை மோட்சக
கதியையெனஞ் வினிலதிக நடமிடுபா
ரதியையருள கடாட்சங கூர
மதியைவர நதியையணி நிதியை ரதன
சபாபதியை வணங்கி வாழ்வாம்.

## விசாலாட்சியம்மை

5. பரிபுரமு மருமறையும் விரவியொலி
நிறைகமல பதத்தி னுளே
யரிபுரமும் விதிபுரமும அடியவாகள்
கொடுத்திட்டதந தருள்செய வாளே
எரிபுரைமே னியாநடிக்கு மெழிலிரதன
சபைத்தழைக்க வினிது மேவும
திரிபுரைநீ ணெடுஙகணவிசா லாட்சிதனைப
போறறியிடர் தீாநது வாழவாம.

(2) திருப்பைஞ்ஞீலித் திரிபந்தாதி:—இது திரிசிர புரம மகாவிதவான மீனாட்சிசுந்தரம பிளளை அவர்க ளால இயறறப பெறறது. 101 பாடலகளை யுடையது.

1. உததமனே யெனறும பைஞ்ஞீலியா யென்று மொணகலஞசே
ரததமனே யெனறும வாழததறி யேனையின் றுணடருளவாய
நிததமனே யபபனே யெனறலறுவா நெஞசுறுவாய
முததமனேகம் பொலிமுலைப்பாகவென முனனவனே.

2. தேவிககுருவம பகிாந்தா பைஞ்ஞீலிச சிவபுராககுப
பாவிககுருகு மனமிலராய பரமருககுத
தூவிககுருமணி ரததினஞ சிநதுந துறைமலியும
வாவிககுரு கினஙகாள சொலலுவீ ரெனறன மையலையே.

(3) இரததினசபாபதிமாலை. ஆசிரியர் பெயர்தெரிய விலலை. 100 பாடலகளைக கொணடது.

1. மதிமாலை மும்மத மானதி மாலை வயஙகுசெமபொன
கதிமாலை வணண நிறததணணல சேவடி கைதொழுதே
எதிமாலை யெயதருள பைஞ்ஞீலி நாதற கிரதனசபா
பதிமாலை யெனனுந துதிமாலை நூறும பகாநதிடவே.

2. மழைககா பொழிநது நனனீா சுதித்தேரி வரையுதவக
குழைததோடி வசசிரத துணடஙகள் மாறிக குறைவதுபோல
விழைததூத ரவுதருநதன மதான மிகுதது மெனமேல்
தழைததோஙகு மன்றிக குறையாது ரதன சபாபதியே.

3. இனிதான சறசன ரில்லாதவூரி லிருப்பதிலுந
தனியேயிருக்கு மவன்வாச நல்லது தன்மஞ செயயா

அனியாயஞ் செய்யுங் கொடுங்கோற் றுரைகளி லஷ்டமத்துச்
சனியாகிலு மெத்த நன்றாகும் ரதன சபாபதியே.

4. சிந்திக்கு நுண்ணறி வில்லோரை மேலவர் சேர்ந்தாரினுந்
தந்தன்மையி லெந்நாளுங் குணறுரினப தாருவைச்சார்ந்
தெந்தப்பொழுதும் பிரியாமல் கூடியிருக்கு மந்த
சந்தனம் வேம்பு மணக்காது ரதன சபாபதியே.

5. கற்றுயர்ந்தவ ருபதேசஞ் செய்தோர் தவங்கைப் பிடித்தோர்
விற்றுனை வேந்தனமைச்சன் கருணீகன வீறுசெம்பொன்
பெற்றோன் வயித்தியஞ் செய்வோ னிவரெட்டுப் பேருடனுஞ்
சற்றாகிலும் பகையாகாது ரதன சபாபதியே.

## 20. தேவாரமும் தனிப்பாடல்களும்

*(1) திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய திருக்குறுந்தொகை. 10 செய்யுட்கள்.*

1. விழுது சூலத்தன் வெண்மழு வாட்படை
கழுது துஞ்சிருள் காட்டகத் தாடலான்
பழுதொன் றின்றிப் பைஞ்ஞீலிப் பரமனைத்
தொழுது செல்பவர் தம்வினை தூளியே.

2. தருக்கிச் சென்று தடவரை பற்றலும்
நெருக்கி யூன்ற நினைந்து சிவனையே
யரக்கன் பாட வருளுமெம் மாணிடம்
இருக்கை ஞீலியென் பார்க்கிட ரில்லையே.

*(2) சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியது. 11 செய்யுட்கள்.*

1. காருலாவிய நஞ்சை யுண்டிருள்
கண்டர் வெண்டலை யோடுகொண்
டூரெலாந்திரிந் தென்செய் வீர்பலி
யோரி டத்திலே கொள்ளுமீர்
பாரெலாம் பணிந்தும்மை யேபர
விப்பணி யும்பைஞ் ஞீலியீர்
ஆரமாவது நாகமோசொலு
மார ணீயவிடங்கரே.

2. அன்னஞ்சேர் வயல் சூழ்பைஞ்ஞீலியி
லார ணியவி டங்கரை
மின்னும நுண்ணிடைமங்கை மாபலா
வேண்டிக காதல் மொழிந்தசொல்
மன்னுதொல் புகழநாவ லூரனவன்
றெண்டன் வாயமொழி பாடல்பத
துன்னியின் னிசைபாடு வாருமை
கேள்வன சேவடி சோவரே.

(3) திருஞான சமபநத சுவாமிகள அருளியது. 11 செய்யுட்கள்.

1. ஆரிடம் பாடில ரடிகளை காடலால்
ஓரிடங குறைவில ருடையா கோவணம
நீரிடஞ சடைவிடை யூர்தி நிததலும்
பாரிடம பணிசெயும பயிலபைஞ் ஞீலியே.

2. கணபுனல் விளைவயற காழிக கறபகம
நணபுண ருமறை ஞானசம் பந்தன
பணபினா பரவுபைஞ ஞீலி பாடுவாா.
உணபின வுலகினி லோங்கி வாழ்வரே.

(4) தனிப் பாடலகள். ஆசிரியாகளின் பெயர்கள் தெரியவில்லை.

1. ஆடரவஞ சூடிநடம ஆடரவங காணவுமே
தேடரவ நீயுகந்தென் சிந்தையில்வந தாண்டருள்வாய
வேடனே யருபிசெயது வியாகர மோட்சங கொடுதது
நீடுபுகழ காரபுன்நத நீலகண்ட நாயகரே.

2. சீதரனும நான்முகனுந் தேடியடிக காணபரிய
நாதவிந்து வேயுமது நன்னெறியைத தேம்பியிப்போ
சாதகம பெடைபிரிந்த தனமையது போலானேன்
ஆதரவு சொல்லெனக்கு அதிகார வல்லவரே.

3. முதலாகி வனைத்தினுக்கும் நிற்கின்ற பொருளே
மும்மூர்தநி சொரூபத்தை யுடையோய் நீமேரு
மதலையாய் வந்தபரை மணங்கொண்ட பொருளே
மயக்கமுடைத தக்கனையு மாளுவிததாய் சிவனே

சுதர்மமதை நிலைநாட்டி நிற்கின்ற பொருளே
சொல்லரிய தததுவததின சுகம்விளைக்கும் பொருளே
கதலிவனம வாழுமுயிா காககும்வான் பொருளே
காணகின்ற வனைததினிலும் ஆனாயநீ பொருளே.

4. சுந்தரம் பொழியுமுகி லளகபார
முகமதில் துளிகைகோ ரித்தமுத்தும்
சுட்டிவெண பிறையிலகு ரதன நிகாக
கொப்புதுலஙகு பொனனோலை யொளியும
செந்தூர திலகநுதல் முதது மூககுததியும
செம்பவள வாயுநகையும
செணடையுங கிளளையும் தஙகவளையும்
பெருகு செஙகையுந திருமேனியும
கந்தர நிறைந்திலகு முகதார தனமார
கருணை யருள்விழி பாாவையும்
கலகலென தணடை யும பாதமும
யானகாண காட்சிதரவேணுமே
செந்திரு தினம்பரவு மேருச் சிதம்பரந
தெரிசிகக வேணடு மடியாா
சிந்தைவளா பைஞ்ஞீலி நாதாபாகத்திலுறை
தேவி விசாலாடசி யுமையே.

5. காலைமாலை யுனைததொழு தேததினேன்
காமவாாக கயலபோல வாடினேன
பாலைவிட் டுப்புனலைக் குடிததிடும
பாவிபோலப பறந்து மயங்கினேன்
நீலியான வனநதனில் மேவிய
நிததாபாக வளரும் பராபரி
மேலதில்லை யில்முககிய மாகிய
விமலையான விசாலாட்சி தேவியே.

---

வாழ்க அந்தணர் வானவா ஆனினம
வீழ்க தணபுனல வேந்தனும ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன நாமமே
சூழ்க வையக முந்துயர் தீாகவே.